# மாற்றுத்திறனாளிகளை, மாற்றத்துக்கான திறனாளிகளாக முதலமைச்சர் உயர்த்திக்கொண்டு இருக்கிறார்!

## சென்னையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!



**சென்னை,செப். 20 -**

**சென்னை தண்டையார்பேட்டையில், வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஏற்பாட்டில், 300 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.75 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.**

**மேலும், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் இயந்திரம் மூலம் கழிவு நீரகற்றும் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.1.5 கோடி மதிப்பில் வழங்கப்பட்ட 2 சீவர் ஜெட்டிங் இயந்திர சேவையைக் கொடியசைத்து தொடங்கி வைத்தார். நலத்திட்டங்களைப் பெற்ற மாற்றுத்திறனாளி தோழர்களை வாழ்த்தி, அவர்களுக்கு என்றும் துணை நிற்போமென உரையாற்றினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

நம் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி அவர்களின் ஏற்பாட்டில், இன்றைய தினம் கிட்டத்தட்ட 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 300 மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்குகின்ற இந்த நிகழ்ச்சியில், கலந்துகொண்டு உங்களையெல்லாம் நேரில் சந்திப்பதில், மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

அவரின் தொகுதிக்கு மட்டுமல்ல, எங்களின் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி பகுதிக்கும் கழிவுநீர் அகற்றுகின்ற பணிக்காக அவரின் ஏற்பாட்டில், சி.எஸ்.ஆர். மூலமாக ஒன்றரை கோடி ரூபாய் அளவில் சீவர் ஜெட்டிங் இயந்திரமும் இந்த மேடையில் வழங்கி இருக்கிறார்.

வடசென்னை பகுதி மக்களின் மேம்பாட்டுக்காக 5 கோடி ரூபாயை சி.எஸ்.ஆர். மூலமாக சென்னை மாநகராட்சிக்கு இன்றைக்கு இவர் அளித்திருக்கிறார். இதற்காக உங்கள் அனைவரின் சார்பாகவும், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், உங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் கலாநிதி வீராசாமி அவர்களுக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மகிழ்ச்சியான வரவேற்பு

எப்போது வடசென்னை நிகழ்ச்சியில் கலந்துகொண்டாலும், மிகச் சிறப்பான, எழுச்சியான, மகிழ்ச்சியான வரவேற்பை, வட சென்னை எப்போதுமே எனக்குக் கொடுத்திருக்கிறது. அதற்கு, இந்த நேரத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் மாதவரம் சுதர்சனம் அவர்களுக்கும், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களுக்கும், சகோதரர் கலாநிதி வீராசாமி அவர்களுக்கும், பொறுப்பு அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கும், வரவேற்பு அளித்த கழக உடன்பிறப்புகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு இந்தியாவில் எத்தனையோ இயக்கங்கள் இருக்கின்றன.

இந்தியா முழுவதும் பல மாநில அரசுகள் இருக்கின்றன. ஆனால், நம் திராவிட முன்னேற்றக் கழகம், நம் அரசு மட்டும்தான் மாற்றுத்திறனாளிகளுக்காக சிந்தித்துச் செயல்பட்டு திட்டங்களை தீட்டுகிறது.

இந்தியாவிலேயே முதன்முறையாக மாற்றுத்திறனாளிகளுக்கு என்று ஒரு துறையை ஆரம்பித்தது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் என்பதை, நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால், மாற்றுத்திறனாளிகள் என்ற பெயரை வைத்ததே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். அதை நாம் மறந்துவிடக்கூடாது. பெயர் வைத்தது மட்டுமல்ல, அந்தத் துறையை முதலமைச்சரின் கீழ் வைத்துக்கொண்டார் என்றால், அதுவும் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். இன்றைக்கு கலைஞர் வழியில், நம் முதலமைச்சர் அவர்களும், மாற்றுத்திறனாளிகள் துறையை தன்வசம் வைத்து, ஒவ்வொன்றையும் கண்ணும் கருத்துமாகப் பார்த்துப் பார்த்து செய்து வருகிறார்.

மாற்றுத்திறனாளிகளை, மாற்றத்துக்கான திறனாளிகளாக நம் முதலமைச்சர் அவர்கள் உயர்த்திக்கொண்டு இருக்கிறார். எனக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் ஒரு நெருங்கிய சொந்தம், அசைக்க முடியாத பந்தம் உண்டு. நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, எனது முதல் சட்டமன்ற கன்னிப் பேச்சில் பேசியது, மாற்றுத்திறனாளிகளுக்கான கோரிக்கை குறித்துதான். மாற்றுத்திறனாளிகளை உள்ளாட்சி அமைப்புகளில் நியமன முறையில் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற, மாற்றுத்திறனாளிகளின் பல வருட கோரிக்கையை, முதலமைச்சரிடம் சட்டமன்றத்தில் பேசினேன். முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று இப்பொழுது, மாற்றுத்திறனாளிகளை உள்ளாட்சி அமைப்புகளில் நியமன முறையில் தேர்ந்தெடுப்பதற்கான ஆணையை அறிவித்து இருக்கிறார். இதன் மூலமாக வருங்காலத்தில், கிட்டத்தட்ட 15 ஆயிரம் மாற்றுத்திறனாளிகள், மக்கள் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறீர்கள். இவ்வளவு நாள் கேட்கிற இடத்தில் இருந்த மாற்றுத்திறனாளிகள், இன்றைக்கு உங்களின் தேவையை அறிந்து, இனி மேல் கொடுக்கின்ற இடத்திற்கு வந்திருக்கிறீர்கள்.

### உங்களின் உரிமைக்குரல்

இனி மாநகராட்சிகளிலிருந்து, ஊராட்சிகள் வரை மாற்றுத்திறனாளிகள் உங்களின் உரிமைக்குரல் எதிரொலிக்கப் போகிறது. நம் முதலமைச்சர் அவர்கள் எந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினாலும், அதில் மாற்றுத்திறனாளிகளை எப்படி அரவணைத்து, அவர்களும் அந்தத் திட்டத்தை உபயோகப்படுத்தும் வகையில்தான் அனைத்துத் திட்டத்தையும் அறிவித்திருகிறார். உதாரணத்திற்கு விடியல் பயணத் திட்டத்தை முதலமைச்சர் அறிவித்தார்கள். அப்போது மகளிருக்கு மட்டும் கட்டணமில்லா பேருந்துத் திட்டத்தை அறிவித்தார்.

உடனே, மாற்றுத்திறனாளிகள் எல்லாம் எங்களுக்கும் கட்டணமில்லா பேருந்து திட்டத்தில் பயணிக்க அனுமதி வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். உடனே அந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மாற்றுத்திறனாளிகளும் கட்டணமில்லா பயணத்தை மேற்கொள்ளலாம் என்று அறிவித்தார் நம் முதலமைச்சர் அவர்கள்.

சமீபத்தில் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்துகிற வகையில், அரசு சார்பில் தாழ்தளப் பேருந்துகள் சேவையையும் நாம் தொடங்கி இருக்கிறோம். குறிப்பாக, தமிழ்நாடு முழுவதும் 840 தாழ்தளப் பேருந்துகள் செயல்பட்டு வருகின்றன.

### பிரத்யேக நடைபாதை

2021-ஆம் ஆண்டு கழக அரசு அமைந்தவுடன் சேப்பாக்கம்- திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள, மெரினா கடற்கரையில், கடல் அலைகளில், மாற்றுத்திறனாளிகள் தங்களின் கால்களை நனைக்க வேண்டும். அவர்களும் அலைகளைப் பார்த்து ரசிக்க வேண்டும் என்ற வகையில் பிரத்யேக நடைபாதையை மாற்றுத் திறனாளிகளுக்கு அமைத்தோம்.

மெரினா கடற்கரையை அடுத்து, இப்போது பெசன்ட் நகர் கடற்கரையிலும், தூத்துக்குடி கடற்கரையிலும் சிறப்பு நடைபாதை அமைக்கப்பட்டு இருக்கிறது. விரைவில் திருவான்மியூர், வேளாங்கன்னி போன்ற கடற்கரைகளிலும் இதேமாதிரி நடைபாதைகளை அமைக்க இருக்கிறோம். சமீபத்தில் தொடங்கப்பட்ட தாயுமானவர் திட்டம் மூலம் மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று, அவர்களின் ரேஷன் பொருட்களை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

'விழுதுகள்' என்னும் திட்டத்தின் மூலம் மருத்துவப் பரிசோதனை சிகிச்சைகளும், மாற்றுத் திறனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. முக்கியமாக மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்புத் தொகை முன்பிருந்த ஆட்சியில் 1,000 ரூபாயாக இருந்தது. நம் அரசு பொறுப்பேற்றதும், அதை நம் முதலமைச்சர் அவர்கள் 2,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தார்கள். மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு, பள்ளிக் கல்வி முதல், கல்லூரியில் முதுகலை, ஆராய்ச்சிப் படிப்பு வரை படிப்புக்கு ஏற்ப, 2 ஆயிரம் முதல் 1 லட்சம் ரூபாய் வரை கல்வி உதவித்தொகையை நம் திராவிட மாடல் அரசு வழங்கி வருகிறது.

### அரசு வேலைவாய்ப்பு

எங்களின் விளையாட்டு மேம்பாட்டுத் துறையிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு மிகுந்த மதிப்பு கொடுத்து வருகிறோம். குறிப்பாக, வெளிநாடுகளில் நடைபெறுகிற விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க, இதுவரை 200 மாற்றுத்திறனாளிகளுக்கு 5 கோடி ரூபாய் வரைக்கும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து வழங்கி இருக்கிறோம்.

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்கள் 200 பேருக்கு இதுவரை 25 கோடி ரூபாய் பரிசுத் தொகையாக நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்.

மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு, வேலைவாய்ப்பையும் நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார். சென்ற ஆண்டு மட்டும் 5 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலையை, நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார். இந்த முறை 20 மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு விளையாட்டுத்துறையின் மூலமாக வேலை கொடுக்க வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு இலக்குக் கொடுத்துள்ளார். நிச்சயம் அதை செயல்படுத்தி, மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு வேலைவாய்ப்பை கொடுப்போம்.

நம் திராவிட மாடல் அரசு மட்டுமல்ல, நம் திராவிட முன்னேற்றக் கழகமும் மாற்றுத்திறனாளிகளின் உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்று பல்வேறு வகைகளில் பணியாற்றி வருகிறது. அதற்கு உதாரணமாகத்தான் தி.மு.க-வில் எத்தனையோ அணிகள் இருந்தாலும், நம் தலைவர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் அணி என்று புதிய அணியைத் தொடங்கி இருக்கிறார்கள். அந்த வகையில், தன்னம்பிக்கைக்கும், விடா முயற்சிக்கும் எடுத்துக்காட்டாக திகழ்கிற மாற்றுத்திறனாளி சகோதரர்களுக்கு, இன்றைய தினத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்குவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

### 8 ஆயிரம் கோடி ரூபாய்

வடசென்னை பகுதி மக்களின் முன்னேற்றத்திற்காக 5 கோடி ரூபாய் நிதியை சென்னை மாநகராட்சியிடம் இன்று ஒப்டைத்துள்ளோம். ஏற்கனவே, வடசென்னையை வளர்ந்த சென்னையாக்க 8 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் இந்த நிதி பங்களிப்பின் மூலமும், புதிய பணிகள் நிச்சயம் தொடங்கும்.

சென்னையை சிங்கார சென்னை என்று சொல்லி வருகிறோம். அதை வெறும் வார்த்தைகளால் மட்டுமல்ல, செயலாக்க வேண்டும் என்று நினைக்கிற மக்கள் பிரதிநிதிகளில் மிக மிக முக்கியமானவர் உங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் கலாநிதி வீராசாமி அவர்கள். அதற்கு உதாரணமாகத்தான் இன்றைக்கு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீவர் ஜெட்டிங் இயந்திரம் கொடுத்திருக்கிறார். அவருக்கு மீண்டும் எனது பாராட்டுகள். அதேபோல் சி.பி.சி.எல்-க்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னதான் ஒரு அரசாக இருந்தாலும் சரி, இயக்கமாக இருந்தாலும் சரி, பல்வேறு நலத்திட்ட நிகழ்ச்சியாக இருந்தாலும், தனியார் பங்களிப்போடு சேர்ந்து செய்யும்போது, இன்னும் கூடுதல் மாற்றுத் திறனாளிகளுக்கு பயன்கள் சென்று சேரும். இனி எந்த நிகழ்ச்சி நடந்தாலும், எப்பொழுது என்னை அழைத்தாலும், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் என்றுச் சொன்னால் நிச்சயம் நான் கலந்துகொண்டு உதவிகள் வழங்குவதற்கு தயாராக இருக்கிறேன் என்று இந்த மேடையில் கூறிக்கொள்கிறேன்.

இன்றைய தினத்தில் நலத்திட்ட உதவிகளைப் பெற்ற மாற்றுத்திறனாளிகள் உங்கள் அத்தனைபேருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் முதலமைச்சர் அவர்கள் என்றைக்கும் உங்களின் நலனையும், உரிமையையும் காக்கின்ற முதலமைச்சராக இருப்பார். ஆகவே, நம் முதலமைச்சருக்கு நீங்கள் பக்கபலமாக இருக்க வேண்டும் என்றுச் சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் சுதர்சனம், ஆர்.டி.சேகர், தாயகம் கவி, ஐட்ரீம்ஸ் மூர்த்தி, எபினேசர், சி.பி.சி.எல் நிர்வாக இயக்குநர் சங்கர், நிதி இயக்குநர் ரோகித்குமார் அகர்வால்

மண்டலக் குழு தலைவர்கள் நேதாஜி கணேசன், தனியரசு, ஆறுமுகம், மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் சர்ப ஜெயதாஸ், இளைய அருணா, நரேந்திரன், சுபேர்கான், நா.மனோகரன், கன்னிகை ஸ்டாலின், பரிதி இளம்சுருதி, பாண்டிச்செல்வம், கவி கணேசன், மருது கணேஷ், எஸ்.டி.சங்கர், சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், பகுதிக் கழக செயலாளர்கள் ஜெயராமன், முருகன், சுரேஷ், செந்தில்குமார், அருள்தாசன், ஜெபதாஸ் பாண்டியன், லட்சுமணன், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் லோகேஷ், ஆர்.டி.மதன்குமார் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

## தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் நடைபெற்றது!

தஞ்சை, செப். 20 -

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாநிலச் செயலாளரும், தமிழ்நாடு வக்பு வாரிய உறுப்பினருமான டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநில துணைச் செயலாளர்கள் அன்வர் அலி, ராபர்ட் ராஜதுரை மற்றும் தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை தெற்கு, திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களை உள்ளடக்கிய கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட அமைப்பாளர்கள் பாவை அனிபா, ஷாகுல் அமீது, தனிஸ்லாஸ், மாவட்ட தலைவர் மரியதாஸ், மாவட்ட துணைத் தலைவர் முகமது ஜின்னா, மாவட்ட துணை அமைப்பாளர்கள் பஷீர் அகமது, அந்தோணி சாமி, அமானுல்லா, அமீது, ராயல் அலி, முகமது ஆரிஃப் மற்றும் ஏராளமான கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில், தி.மு.கழக முப்பெரும் விழாவில் பாவேந்தர் பாரதிதாசன் விருது பெறவிருந்த நிகையில் மறைந்த கழக மூத்த முன்னோடி குளித்தலை சிவராமன் அவர்களுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்ததாக, இந்திய திருநாடே வியந்து போற்றும் விதமாக பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பிறந்தநாள் விழா, பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்தநாள் விழா மற்றும் கழகம் உதயமான நாள் விழா ஆகிய முப்பெரும் விழாவினை தலைமையேற்று நடத்திய இந்தியாவின் நம்பிக்கை 2026 தேர்தலில் வரலாற்று வெற்றியை பெறவிருக்கின்ற கழகத் தலைவர் முதல்வர் அவர்களுக்கு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

மேலும், முப்பெரும் விழாவில் விருது பெற்ற அனைத்து கழக மூத்த முன்னோடிகளுக்கும் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் சார்பில் வாழ்த்துகள் தெரிவித்து தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

தி.மு.கழகம் துவங்கிய நாள் முதல் இன்றுவரை சிறுபான்மையின மக்களின் நலனுக்காக செயல்படுத்தியுள்ள திட்டங்களை சிறுபான்மையின மக்களிடம் கொண்டுசெல்லும் பொருட்டு, கலைஞர் பிறந்தநாள் திருவாரூரில் அக்டோபர் மாதம் 4 ஆம் தேதி முதல் மாபெரும் கருத்தரங்கம் நடத்துதல் மற்றும் 'வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு' என்ற கழகத் தலைவரின் முழக்கத்தை மெய்ப்பித்து கழகம் 200க்கும் அதிகமான தொகுதிகளில் வென்று ஏழாவது முறையாக ஆட்சியைப் பிடிக்க கழக சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவின் சார்பில் அயராது உழைத்திடவும், 'வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு' 'தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

## திருத்துறைப்பூண்டி தொகுதி வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்!

### பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆலோசனைகள் வழங்கினார்!

திருவாரூர்,செப். 20 –

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச் சாவடிகளுக்கு கழகத்தால் நியமிக்கப்பட்ட வாக்குசாவடி நிலை முகவர்கள் பி.எல்.ஏ.2. பி.டி.ஏ., ஆகியோர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநில இலக்கிய அணி துணை செயலாளரும் தொகுதி பார்வையாளருமான சௌமியன் தலைமை ஏற்றார். மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார்.

இந்த கூட்டத்திற்கு மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், ஒன்றிய கழகச் செயலாளர்கள் வி. எஸ்.ஆர்.தேவதாஸ் , பால. ஞானவேல், ப.பிரகாஷ் இரா. மனோகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. வாக்குச்சாவடி நிலை முகவர்களின் பணிகளின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தியதோடு, அவர்களின் சந்தேகங்களுக்கு தெளிவான விளக்கங்களை கொடுத்தார். கூட்டத்தில் வாக்குச்சாவடி நிலை முகவர்களும் மற்றும் தி.மு.கழக நிர்வாகிகளும், பங்கேற்றனர்இ

ந்த கூட்டத்தின் முடிவில் கோட்டூர் வடக்கு ஒன்றிய கழகத்தைச் சேர்ந்த 25க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி தங்களை மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே கலைவாணன் எம்.எல்.ஏ., முன்னிலை யில் திமுகவில் இணைத்துக் கொண்டனர். கழகத்தில் இணைந்த அனைவருக்கும் மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் கழக துண்டு அணிவித்து வரவேற்றார்.



முதலமைச்சர் அவர்கள் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.66 கோடியே 78 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை மாநகருக்கு செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கூடுதலாக நாளொன்றுக்கு 265 MLD குடிநீர் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைக்கவுள்ளதை முன்னிட்டு, அதற்கான விழா முன்னேற்பாடு பணிகளை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள் நேற்று முன்தினம் (18.09.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தார். இவ்வாய்வின்போது, சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் கௌரவ் குமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் திருமதி ரா.சரண்யா, சென்னை குடிநீர் வாரியத்தின் பொறியியல் இயக்குநர் (பொ) திருமதி ஒ.பர்வீஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.அன்பில் மகேஸ் பொய்யாமொழி மதுராந்தகம் ஒன்றியம் மேலவலம்பேட்டை ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார். மாணவர்களிடம் திருக்குறள் மற்றும் செய்யுள் சொல்லச் சொன்ன அமைச்சர், அவர்களின் வாசிப்புத் திறனையும் ஆய்வு மேற்கொண்டார். இப்பள்ளி சிறந்த தொடக்கப்பள்ளிக்கான பள்ளிக் கல்வித்துறை விருதையும் பெற்றுள்ளது. அதனையும் அமைச்சர் பாராட்டினார். சத்துணவுப் பணியாளர்களுடன் கலந்துரையாடி அவர்களின் பணிகள் குறித்தும் கேட்டறிந்தார். வடமாநிலத் தொழிலாளர்களின் குழந்தைகள் இப்பள்ளியில் பயில்கிறார்கள். அவர்களிடமும் அமைச்சர் கலந்துரையாடி அவர்களின் கற்றல் திறனை ஆய்வு செய்தார்.